இதேவேளை, கூட்டமைப்பின் வெற்றியை கொண்டாடும் வகையில், வெடிகொழுத்தி ஆரவாரிப்பதையும் காணமுடிகின்றது. யாழ். நகர், நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் வெடிகொழுத்தி கூட்டமைப்பினரின் வெற்றியை மக்கள் கொண்டாடுகின்றனர். (111)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வருடப்பிறப்பன்று துர்க்காதேவி ஆலயத்தில் விசேட பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வருடப் பிறப்பு விழா- எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் பூஜைகள் இரவு 7.30 மணிவரை நடைபெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு வருடப்பிறப்பு அபிஷேகமும், 4.30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், அம்பாள் வீதியுலாவும் இரவு 7.30 மணிக்கு அர்த்தசாமப் பூஜையும் இடம்பெறவுள்ளது. (44)

### குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த விழிப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்திலும், பிரதேச செயலக மட்டங்களிலும் விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலாளர்களைத் தலைவராகவும், மதப்பெரியார்கள், கல்விமான்கள், ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டும் இந்த விழிப்புக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

### சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தை பயன்படுத்த தடை

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் மைதானத்தை - மறு அறிவித்தல் வரும்வரை யாரும் பாவிக்க வேண்டாம் எனக் கல்லூரியின் அதிபர் எஸ்.கைலநாதன் அறிவித்துள்ளார்.

இதனைக் கருதாமல் மைதானத் தைப் பயன்படுத்துவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.- (25)

### கட்சி அலுவலகங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நகரப் பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி), ஆனந்தசங்கரி ஆகியோரின் அலுவலகங்களுக்கே இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தக் கட்சிகளின் அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன. (111)

### உயர்தர வகுப்பிற்கு விண்ணப்பிக்கலாம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கா.பொ.த.உயர்தர வகுப்பிற்கு புதிய அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் எஸ். கைலநாதன் தெரிவித்தார்.

கலை,வர்த்தகம்,-கணிதம், உயிரியல் ஆகிய பிரிவுகளில் கற்க விரும்பும் தகுதியுடையோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. (25)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports



# விளையாட்டு அரங்கம்

## இவனின் எழுச்சி நிரந்தரமானது

முரளியின் பந்துவீச்சு முறைமை பற்றிய சர்ச்சை 1995 இல் ஆரம்பமாகி, தொடர்ந்து ICC யின் இறுதித் தீர்ப்புடன் முடிவுக்கு வந்தது. இன்று இலங்கை - அவுஸ்ரேலிய மூன்று டெஸ்ட் முடிவுக்கு வந்துள்ளநிலையில், முரளியின் புதியதான ஒரு பந்துவீச்சு முறைமை பற்றி ஆட்ட மத்தியஸ்தர் கிறிஸ் புரோட் சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்.

அதாவது, வலதுகை துடுப்பாட்ட வீரரின் ஆட்டத்தின்போது, வீரரின் முன் விழுந்து விலகிச்செல்லும் Doosar என்ற ஒருவகைப் பந்துவீச்சு முறையே முரண்பாடாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ் புரோட் ஒரு தான் கூறும் காரணங் கின்றார். முரளியைப் லாந்துத் தொடரிலி பந்துவீச்சைப் பின்பற்று டருக்கோ, கிளைவ் புலப்படாத இந்தக் குறை பெரிதாகத் தெரிகின்றது.

நேர்மையான மனிதனாக நின்று, களை நியாயப்படுத்த முயல் பொறுத்தவரை இங்கி ருந்தே Doosar வகைப் கிறார் அவர். மைக் புரோக் லொயிட் அவர்களுக்குப் இப்போது இவருக்கு மட்டும்

எனவே, இதுபற்றி நிர்வாகிகள் சில நடவ வேண்டும். அதன் பின் ICC இற்கு அறிக்கை அனுப்பவேண்டும். இதி லுள்ள பாதகமான நிலைமை என்னவெனில் - சிம்பாப்வேக்கான இலங்கை அணியின் கிரிக்கெட் தொட ரில் முரளி தற்காலிகமாகவே னும் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்து விடுவாரோ என்பதுதான். அப்படியாயின் சிம்பாப்வே சுற்றுப்பய ணத்தின்போது நிச்சயமாக கோட்ணி வோல்ஷின் 519 என்ற விக்கெட் இலக்கை அநாயசமாக முரளி தாண்டிச்செல்வார். இப்பொழுது முரளி பெற்றுள்ள இலக் குகள் 513. அதேவேளை, ஷேன்வோண் பெற்றுள்ள இலக்குகள் 517.

இலங்கைக் கிரிக்கெட் டிக்கைகளை மேற்கொளள



முரளி
"விசம் விசமம் அல்ல"

இதனை ஒப்பிட்டு நோக்கும்போது, இயல்பானதொரு சந்தேகம் எழுகின்றது. பொதுவாக அவுஸ்ரேலியா - இங்கிலாந்து இரண்டும் ICC யின் மேட்டுக்குடி அங்கத்தவர்களாகவும், கறுப்பின மற்றும் ஆசிய நாட்டு அணிகள் அடிமைகள் போன்றதொரு அருவருப்பான பார்வை இருப்பதை பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த நிலையில்,, வோண் உலக சாதனையை முதலில் எட்டவேண்டும் என்பதற்காக முரளியின் வேகத்துக்குத் தடைபோடும் நடவடிக்கையாக இது இருக்கக்கூடுமோ என்றும் சந்தேகம் ஏற்படுவதை தடைசெய்ய முடியவில்லை. இருந்தாலும், ஒன்றை நிச்சயமாகக் கூறமுடியும் - இன்று முரளியின்மீது சுட்டப்படும் அத்தனை விரல்களையும் மடக்கி வைத்துக்கொண்டு, அவரின் எதிர்கால சாதனை இலக்கைக்கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டு நிற்கப்போகின்றார்கள் என்பதே அது.

- நிமலா

## கண்ணீர்விட்டே வளர்த்தோம்



1989 ஆம் ஆண்டு கிருஷ்ணமாச் சாரி சிறிகாந்த் தலைமையில் பாகிஸ்தான் சென்ற இந்திய அணி, நான்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. இந்திய அணியைவிடப் பலமாக அமைந்திருந்த பாகிஸ்தான் அணியுடன் நான்கு டெஸ்ட் போட்டிகளையும் சமன் செய்துகொண்டதே, வெற்றி பெற்றதுக்குச் சமன் என்றார் அன்றைய தலைவர். இன்று எதிர்பார்த்ததைவிடவும் உற் சாகமாக முன்னேறிக் கொண் டிருக்கும் போட்டித் தொட ரின் ஊடாக, கடந்தகால நினைவுகளை மீட்டுப் பார்ப்ப திலும் ஒரு சுகம் இருக்கத் தான் செய்யும்.

அன்றைய பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் இம்ரான்கான், வசீம் அக்ரம், வக்கார் யூனுஸ், சுழல் பந்துவீச்சாளர்களில் மாதிரிக்கு ஒருவரான அப்துல் காதிர் இவர்களை எதிர்கொள்வது என்பது, புயலை எதிர்கொள்வது போன்றதுதான். அதுவும் பாகிஸ்தான் மண்ணில். அந்தச் சுற்றுப் போட்டியில் இந்தியத் தரப்பில் சுண்டி எடுக்கக் கூடியவர்களாகப் பந்து வீச்சில் மனோஜ் பிரபாகரையும், துடுப்பாட்டத்தில் சன்ஜே மஞ்சரேகாரையும் - சிறிகாந்த் நினைவுகூருகின்றார். ஏனோ அஸாருதீன் பாகிஸ்தான் தொடரில் சோபிக்கமுடியவில்லை. அதனால், மனம் வருந்திய அஸார் - அணியிலிருந்து ஒதுங்கி, வீடு செல்ல (இந்தியா) சிறிகாந்திடம் அனுமதி கேட்டாராம்.

சிறிகாந்த் - அஸாரை நோக்கி நீ உன்னை நம்பு, இறைவனை நம்பு என்று தைரியம் கொடுத்து, அஸாரை அடுத்த ஆட்டத்திற்குத் தயாராக்கி இருக்கிறார். அதன்பலன் அஸார் ஒரு சதத்தை அடித்தார். துடுப்பாட்டம் பற்றிக் கூறும்போது - சன்ஜே மஞ்சரேகர் பற்றிக் குறிப்பிட்டார். அந்த டெஸ்ட் தொடரில் சன்ஜே மஞ்சரேகர் அடித்த இரட்டைச் சதத்தைத்தான் (1989) தற்போது 2004 இல் வீரேந்தர்சேவாக் முறியடித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு பற்றிச் சிறிகாந் கூறும்போது - ரசிகர்களால் தமக்கும் தம் வீரர்களுக்கும் ஏற்பட்ட சில தடங்கல்கள் பற்றிக் கூறியுள்ளார். ஆனால், அவற்றைப் பெரிதுபடுத்திக் கூற விரும்பவில்லை. ஆனால், அன்றைய நிலையோடு இன்றைய மைதான ஒழுங்கு, ரசிகர்களின் கட்டுப்பாடு என்பவற்றைப் பற்றிப் பார்க்கும்போது, பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்பதையும், அதோடுகூட விஷேடமாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் ரசிகர்கள் இந்தப் போட்டித் தொடர் வெற்றிகரமாக அமைய எவ்வளவு ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள் என்பதையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது.

இந்த வகையில் பல விடயங்களைப் பார்த்துக்கொண்டு செல்கையில் முக்கியமானதும், முதன்மையானதுமான செய்தியொன்று முத்தாய்ப்பாக வருகின்றது.

1989 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்ற சிறிகாந்த் தலைமையிலான அணியில்தான் ஒரு பதினாறு வயதுச் சிறுவன் எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் இடம் பிடித்திருந்தான். அவன் பெயர் சச்சின் ரமேஷ் டெண்டுல்கர். இன்று 2004 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் மண்ணில் நிற்கும் அணியில் 1989 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சென்ற அணி வீரர்களுள் எஞ்சிய ஒருவராக நிற்பவர் சச்சின் மட்டுமே. ஏனைய அத்தனை பேருக்கும் பாகிஸ்தான் புதிது.

அந்தச் சுற்றுப்போட்டி பற்றிக் கருத்துக்கூறும் சச்சின் - அனுபவ முதிர்ச்சி வாய்ந்த இந்திய வீரர்களுடன் விளையாடியது ஒரு மறக்கமுடியாத அனுபவம் என்கிறார்.

அதோடு, பிரபல்யம் வாய்ந்த பாகிஸ்தானிய பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளவே நான் ஆசைப்பட்டேன். எனது அணியின் மூத்தவீரர்களின் ஆலோசனை, தைரியம் எதிரணி ஜாம்பவான்கள் மீதான ஆக்ரோஷத்தைத்தான் என்னிடம் அதிகரித்தது என்கிறார்.

இப்படியாக இந்திய - பாகிஸ்தான் தொடர் 2004 விறுவிறுப்பாகச் செல்கிறது. 1989 ஆம் ஆண்டு களத்தில் கண்ட பல முகங்கள் இன்று மைதானத்திற்குள் இல்லாவிட்டாலும், வேறு பணிகளில் மைதானத்தில் நிற்பது சந்தோஷமாக இருக்கிறது.

- துஷ்யந்தன்

## தேவை ஒரே தலைவன்*

அண்மைக் காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியில் ஏற்பட்ட அனாவசியமான குழப்பம் என்றால், அது தேசிய அணிக்கு இரண்டு அணித்தலைவர்கள் நியமிக்கப்பட்டதேயாகும். 2003 ஆம் ஆண்டில் சனத் ஜெயசூரியாவிற்குப் பின் மாவன் அத்தப்பத்து அணித்தலைவராக நியமிக்கப்படும் சாத்தியங்கள் அனைத்தும் உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், திடீரென்று டெஸ்ட் ஆட்டங்களுக்கு ஹசான் திலகரட்ன தலைவராக்கப்பட்டார். அதேவேளை, அத்தப்பத்து இரண்டு வகை ஆட்டங்களிலும் தலைமை வகித்தால் சுமை அதிகமாக இருக்குமென்றும், அதனாலேயே இந்த முடிவென்றும் கூறப்பட்டது.

ஆனால், இதுவரையில் ஹசான் தலைமைதாங்கிய பத்து - டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் மட்டுமே இலங்கை அணிவென்றுள்ளது. நான்கில் தோல்வி கண்டுள்ளது. ஆனால் அத்தப்பத்து மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் இங்கிலாந்துக் கெதிராக வெற்றிகளைக் காட்டியிருக்கிறார். விமர்சகர்கள் இவாகளைப் பற்றிககூறும் போது - அத்தப்பத்து அதிகாரம் மிக்க தன்மைகள் கொண்டவர், ஆனால் ஹசான மிகுந்த மெனபோக்குக் கொணடவர் என்றும் சுட்டிக்காட்டுகிறார்கள். அதோடு ஹசான திலகரட்ன தனது துடுப்பாட் டத்திலும் சரி, அணி வழி நடத்தலிலாயினும் சரி எப்போதும் தற்காப்பு வியூகத்தையே வகுத்துககொள்பவர் எனறும் ஆக்கிரமிப்பு வியூகத்துக்குத் தயங்குபவர் என்றும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இதுவே இலங்கை அணியின் பின்னடைவுக்கும், ஹசான் மீதான அதிருப்திகளுக்கும்கூடக் காரணமாக அமைந்தது எனலாம். உதாரணமாக இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 1:0 இற்குப் பதிலாக 3:0 என்றே வென்றிருக் கலாம்.

ஆனால் ஹசானின் எதிர்மறை அணுகுமுறையே பின்னடைவிற்குக் காரணம் என்று குற்றச்சாட்டு சுமத்தப் பட்டது.

விமர்சகர் இந்தக் குழப்பமான நிலைக்கு இந்த இருவரையுமே குற்றம் சாட்டவில்லை. உண்மையில் தெரிவாளர்களின் செயற்பாடு இவற்றுக்குக் காரணமென்று கூறுகிறார்.

அதாவது, புதிய தெரிவாளர்கள் சபையில் அதன் தலைவரோ அல்லது மற்றைய அங்கத்தவர்களோ குரல் இழந்தவர்களாக இருப் பதாகவும், அரவிந்த டி சில்வா தனது செல்வாக்கு அதிகாரத்தைப் பயன்படுத்தி தன் இஷ்டம்போல் செயற்படுகிறார் என்றும் மற்றவர்கள் வெறும் பார்வையாளர்கள் தான் என்றும் சாடுகிறார்.

இந்த அதிருப்திகளின் தொடர்சியாக ஒரு உயர் அதிகாரிகூட இராஜினாமாச் செய்ய முயற்சித்ததாகவும் கூறப்படுகிறது.

அத்தப்பத்துவுக்கு சுமைகூடும் என்ற தெரிவாளர்களின் கருத்தை மீண்டும் பார்க்கும்போது, பாடசாலை விட்டு விலகி 14 வருடங்கள் ஆகின்றன.

அர்ஜுன ரணதுங்க அணித்தலைவரானது எத்தனை வயதில்? ஏன் அரவிந்த இந்த மாபெரும் பொறுப்பை 26 வயதில் ஏற்றுக்கொள்ளவில்லையா? அத்தோடு அத்தப்பத்து 3 வருடங்கள் சனத் ஜெயசூரியாவின் கீழ் பணியாற்றி அனுபவம் பெறவில்லையா? என்றெல்லாம் வினாக்களைத் தொடுத்துக்கொண்டே போகிறார்.

இவற்றையெல்லாம் கூறப்போன தெரிவாளர்கள் இங்கு மட்டுமல்ல எங்குமே கல்லெறிபடுவது காய்க்கும் மரங்கள் தான் என்று சாக்குப்போக்குச் சொல்கிறார்கள். சரி அத்தப் பத்துவிற்குத்தான் கொடுக்கவேண்டுமென்றில்லை.

தென்னாபிரிக்க கிரேம் ஸ்மித்தை அணித்தலைவராக்கியது போல, துணிந்து இலங்கை அணியிலும் ஒரு இளம் தலைமுறை வீரனை தலைவராக்கி இருக்கலாம். அதையும் செய்யவில்லை. அதுகூட அத்தப்பத்துவை ஓரளவு சாந்தப்படுத்தியிருக்கும். ஆனால், நியாயமில்லாமல் அத்தப்பத்துவைத் தூக்கியெறிந்தது எவ்வளவு நியாயமற்ற செயல் என்று சாடுகிறார் விமர்சகர்.

இந்த நிமிடத்தில் இரண்டு அணித் தலைவர்களைக் கொண்டுள்ள ஒரே நாடு இலங்கைதான். ஹசான் திலகரட்ண தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டதாக செய்திகள் வருகின்றன.

எனவே, அத்தப்பத்துவே இரண்டு வகை ஆட்டங்களுக்கும் தலைவரா? அல்லது அத்தப்பத்து டெஸ்ட் ஆட்டத்திற்கும் இன்னொரு புதுமுகம் ஒரு நாள் ஆட்டத்துக்குமாக நியமிக்கப் படுவார்களா?

ஏதோ தெரிவாளர்கள் தீர்மானிப்பதற்கு அப்பால் யார் என்ன செய்யமுடியும்?

- நிர்மலன் -





அத்தபத்து
"இவனிருக்கப் பயமேன்"

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# நட்புக்கரத்தை நாசமாக்காதே


அத்தபத்து - சைமன்ட்ஸ் "தொடர்ந்து ஆடுங்களேன்"

அதிகாரம் உள்ளவன் குற்றம் செய்தாலும் தப்பிக்கொள்ள முடியும். இது கிரிகெட் ஆட்டத்துக்கும் பொருந்தும். தற்போது நடந்து முடிந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியின் மூனறாவது நாள் காலை ஜஸ்ரின் லாங்கருக்கு நன்றாகவே விடிந்தது. ஏனென்றால் கடும் தண்டனைக்கு உள்ளாக வேண்டிய அவர் - அவுஸ்ரேலியராகவும், வெள்ளைத்தோல் கொண்டவராகவும் இருந்தபடியால், சிறியதொரு கண்டன வார்த்தையுடன் தப்பிவிட்டார்.

நடந்த சம்பவம் இது தான். இடதுகை ஆட்டக்காரர் ஹசான் திலகரட்னாவும், வலது கை ஆட்டக்காரர் திலான் சமரவீரவும் ஆடிக்கொண்டிருந்தவேளை அது இடையில் களத்தடுப்புக்காக இடம்மாறிய வேளையில் பேல்ஸ்களைக் கையால் லாங்கர் தட்டிவிட, ரிக்கிபொண்டிங், கில்கிறிஸ்ட், வோண் எல்லோரும் சேர்ந்து நடுவரை நோக்கி கேள்வியையெழுப்பி இருக்கிறார்கள். இந்த வகையில் ஒரு விக்கெட்டை வீழ்த்த அவுஸ்ரேலியர்கள் எண்ணியதே மகா அசிங்கம்.

நடந்த சம்பவத்தை உடனடியாக நடுவர் மூன்றாவது நடுவரிடம் விடவே - நடந்த சம்பவம் தெளிவாகவே தெரிந்தது. ஆனால், பின்னர் லாங்கர் கருத்துக் கூறும்போது, தனக்கு அப்படி நடந்தது தெரியவில்லை என்று கூறியிருக்கிறார். அப்படியானால் விறைத்த விரலுடன் இவர் டெஸ்ட் ஆடுகிறார் என்று சாடுகிறார் ஒரு விமர்சகர். அது தெரியவில்லையென்றால் தெரிந்த பின் கௌரவமாக துடுப்பாட்ட வீரரிடம் கதைத்திருக்கலாமே. தான் சம்பந்தப்படாத ஒரு சம்பவத்திற்கு, அன்ரூ சைமண்டை மீள வந்து ஆடுமாறு அழைக்கும் கௌரவமும், மனப்பக்குவமும் மாவன் அத்தபத்துவிடம் இருந்ததே. இவை கூடவா அவுஸ்ரேலிய வீரருக்கு மனதில் படவில்லை.

இந்த விடயத்தை கண்டும் காணாமலும் விட்டுவிட்ட ICC நிர்வாகிகள்மீது ஒரு விமர்சகர் கடும்கண்டனம் தெரிவிக்கிறார். இந்தச் சம்பவத்தின் மூலம், ஏதோ ஒரு வகையில் அதிகாரிகள் அவுஸ்ரேலியாவிற்கு பக்கச் சார்பாகவே நடக்கிறார்கள் என்பது நிரூபணமாகி வருவதாகவும், அண்மைக் காலத்தில் அவுஸ்ரேலியா - கிரிக்கெட் கௌரவத்துக்குப் புறம்பான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும், ஆனால் அவர்கள் எப்படியும் தப்பிவிடும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்கிறார்கள் என்றும் கவலை தெரிவிக்கிறார்.

சில ரசிகர்கள் அப்பால் சென்று இலங்கை அணி வீரர்கள் மீது தமது கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

அதாவது தமக்கு நிச்சயம் வெற்றி என்றிருந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியை, தோல்வியாக்கிக் கொண்ட இலங்கை - மூன்றாவது டெஸ்ட் போட்டியை சமமாக்கிக்கொள்ளும் சந்தர்ப்பம் இருந்தும், தாரை வார்த்துக் கொடுத்த இலங்கை - முதலாவது டெஸ்ட்டில் கூட ஆரம்பத்தில் இருந்த வீராவேசத்தை இறுதியில் இழந்த இலங்கை, இவற்றையெல்லாம் சரியாகச் செய்திருந்தால், இன்று அவுஸ்ரேலியா இந்தளவு மதிப்பில் இருக்க முடியாதே என்று கோபப்படுகின்றார்கள். அவுஸ்ரேலிய அணிபோல் எம்மால் அசிங்கமாக நடக்க முடியாது. ஆனால் பந்தாலும், துடுப்பாலும் பதில்கொடுத்து, அவர்களின் ஆணவத்தை அடக்கியிருக்கலாம். அதைத்தவற விட்டது எமது பிழைதானே.

- காவேரி கிருஸ்ணன்-

# ஐந்திலேயே அற்புதமாக வளைந்தவர்


சலீம் மாலிக் "நட்சத்திரங்களில் ஒன்று"

கடந்த மாதம் நடைபெற்று முடிந்த பத்தொன்பது வயதுக்குட்பட்ட ICC கிண்ணப் போட்டிகளின் முடிவில், திறமைவாய்ந்த பல பந்துவீச்சாளர்களை இனங்கண்ட ICC - இதில் ஆறுபேருடைய பந்துவீச்சு முறையிலுள்ள குறைபாடுகள் பற்றி, அந்தந்த நாட்டு கிரிக்கெட் சபைகளுக்கு எடுத்துக் கூறியுள்ளது.

இந்த அவதானத்தைச் செய்தவர்கள் ICC யின் விற்பன்னர்கள் சபை. இந்தச் சபையின் அங்கத்தவர்கள் வக்கார் யூனுஸ் பொப்வூல்மர் மற்றும் பேராசிரியர் புரூஸ் எலியட். இந்த விற்பன்னர்கள் குழு - கிரிக்கெட் ஆட்டத்தின் வளர்ச்சி குறித்த பல நடவடிக்கைகளில் ஒன்றாக அமைக்கப்பட்டது.

குறித்துக் காட்டப்பட்ட ஆறு பந்துவீச்சாளர்க

| | |
|---|---|
| முஷ்டாக்முகமட் | (பாக்) 17 வயது 82 நாள் (1961) |
| மொகமட் அஷ்ரபுல் | (ப.தேஷ்) 17 வயது 89 நாள் (2001) |
| சச்சின் டென்டுல்கார் | (இந்தியா) 17 வயது 112 நாள் (1990) |
| ஹமில்ரன் மஸ்கட்ஷா | 17 வயது 363 நாள் (2001) |
| இம்ரான் நசீர் | 18 வயது (2000) |
| சலீம் மலிக் | 18 வயது 336 நாள் (1981) |
| மொகமட் இலியாஸ் | 19 வயது |

ளும் எதிர்காலத்தில் தேசிய அணிகளில் பங்குகொள்ளும் வாய்ப்பு இருப்பதால், அவர்கள் மீதான கரிசனை கூடுதலாக இருக்கின்றது. இனி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அந்தந்த நாடுகளைச் சார்ந்ததாக இருக்கும்.

நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாகப் பந்துவீச்சாளர்களின் குறைகளை நிவர்த்தி செய்வது பற்றிய விடயத்தில் நிறைய பங்களிப்புச் செய்திருக்கிறோம். இனி அவர்களைப் புடம்போட்டு எடுக்கவேண்டியது அந்தந்த நாடுகளின் பொறுப்பு என்கிறார் மல்கம் ஸ்பீட்.

கடந்த ஒரு வருடகாலத்தினுள் மூன்று பந்துவீச்சாளர்களை நேர்சீர்ப்படுத்தும் முயற்சியில் ICC யின் விற்பன்னர்குழு வெற்றியடைந்திருக்கிறது. மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த ஜேர்மைன் லோசன், வங்காளதேச அணியைச் சேர்ந்த சன்வார் ஹொசைன், பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த சாபிர் அஹமட் ஆகியோர் இவர்களாவர்.

இவர்களுள் உபாதைகள் காரணமாக ஜேர்மைன் லோசன் இன்னும் களம் இறங்கவில்லை. மற்ற இருவரும் தம் நாட்டுக்காக விளையாடத் தொடங்கி விட்டார்கள்.

என்றாலும் உள்ள வேலையோடு இந்த வேலையும் சுமையைக் கூட்டுகிறது என்று எண்ணுகிறார்களோ தெரியவில்லை. அந்தந்த நாடுகளே ஆரம்பத்திலேயே தம் பந்துவீச்சாளர்களின் குறைகளைக் கண்டுபிடித்துத் திருத்திக்கொண்டால், சர்வதேச களத்திற்குள் அவர்கள் நுழையும்போது, சங்கடங்கள் இராது என்று ஆலோசனை வழங்கியிருக்கிறது.

19 வயதிற்குட்பட்ட பந்துவீச்சாளர்கள் தொடர்பில் பேசியபோது, 19 வயதிற்குள்ளேயே தேசிய அணியில் புகுந்து சதம் போட்ட சில பிஞ்சுகள் பற்றிய ஞாபகம் கூடவே வந்தது.

- மக்டலின

# தொலைத்துவிட்டு நிற்கிறார்கள்


சமிந்தவாஸ் "சிறிது பொறுத்திருங்கள்..."

நாற்பது நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்த ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸரேலிய கிரிக்கெட் அணி - ஒருநாள் போட்டித் தொடரையும், டெஸ்ட் தொடரையும் வென்ற பெருமிதத்தோடு நாடு திரும்பியுள்ளது.

ஒரு நாள் போட்டித் தொடரில் இரண்டு போட்டிகளிலாவது வெற்றிபெற்ற இலங்கை அணியால், டெஸ்ட் போட்டித் தொடரில் ஒருபோட்டியேயாவது சமன் செய்ய முடியாமல் போனமை துரதிஷ்டவசமானதே. இலங்கையணியின் மோசமான களத்தடுப்பும், நிதான மற்றதும், பொறுப்பற்ற துமான துடுப்பாட்டமுமே இந்தத் தோல்விக்குக் காரணமாகும்.

நடந்துமுடிந்த மூன்று டெஸ்ட் போட்டித் தொடரின்போது, இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் தமது பங்களிப்பைத் திறம்படவே செய்துள்ளனர். காலியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, முதலாவது இனிங்சில் அவுஸ்ரேலிய அணியைவிட 161 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்றுக்கொண்ட இலங்கையணி - இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, வெற்றி பெறமுடியாமல் 150 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இலங்கையணித் துடுப்பாட்ட வீரர்களைவிட, பந்து வீச்சாளர்களை நம்பியிருப்பதே இந்தகைய தோல்விகளுக்கு காரணமாகின்றது. அதிலும் குறிப்பாக, முரளிதரனின் பந்து வீச்சையே முழுமையாக இலங்கையணி நம்பியிருக்கிறது. முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, இரண்டு இன்னிங்சிலுமாக முரளிதரன் மட்டும் 110 ஓவர்கள் பந்து வீசியமையிலிருந்து இது தெளிவாகின்றது.

கண்டி -அஸ்கிரிய மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியின்போது, இலங்கையணி வீரர்களது பொறுப்பற்ற துடுபாட்டமே தோல்விக்குக் காரணமாகியது. 120 ஓட்டங்களுக்குள் அவுஸ்ரேலிய அணியினைக் கட்டுப்படுத்திய இலங்கையணியினர் - அதிகளவு ஓட்டங்களைக் குவிப்பரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இலங்கையணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை. இறுதி விக்கெட்டுக்காக பந்து வீச்சாளர்களான சமிந்தவாஸும், முரளிதரனும் பெற்றுக்கொடுத்த இணைப்பாட்டமே இலங்கை அணியை 211 என்ற இலக்குவரை நகர்த்தியது.

இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்ரேலிய அணி பெற்றுக் கொண்ட 442 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய இலங்கையணி - ஒரு கட்டத்தில் சனத்தின் அபார சதத்துடன் 7 விக்கெட்டுக்களை இழந்து, 301 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சமிந்தவாஸும், லொக்கு ஆராச்சியும் நிலைத்து நின்று ஆடியமையும், ஒரு நாள் மீதமாக இருந்தமையினாலும் இலங்கையணி வெற்றிபெறும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இறுதி நாள் 3 விக்கெட்டுக்களுடன் 51 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில், களம் இறங்கிய இலங்கையணி - சமிந்தவாஸின் பொறுப்பற்ற துடுப்பாட்டத்தினால் 27 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது. அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரரான சமிந்தவாஸ் - அவசரப்பட்டு அடித்தாட முற்பட்டு, விக்கெட்டினை இழந்தது குறித்து ரசிகர்கள் மத்தியில் விசனம் ஏற்பட்டுள்ளது.

இதேசமயம், வழமையாக ஒருநாள் போட்டிகளின்போது, பல பந்துகளை வீணடித்து, சில ஓட்டங்களைப் பெறும் அணித் தலைவர் ஹசான் திலகரட்ண இந்தப் போட்டியில் ஏன் அவசரப்பட்டு துடுப்பெடுத்தாடி, விக்கெட்டினை இழந்தார் என்ற வினா எழுகின்றது. கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி டெஸ்ட் போட்டியின்போது சமனிலைப்படுத்துவதற்கான வாய்ப்பு இலங்கையணியிடம் காணப்பட்டபோதும், தோல்வியைத் தழுவிக்கொண்டது.

அவுஸ்ரேலிய அணி பெற்றுகொண்ட 401 ஓட்டங்களுக்கு பதிலளித்து, சிறப்பாக துடுப்பெடுத்தாடிய இலங்கையணி - 409 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஆனாலும், இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்ரேலிய அணி பெற்றுக்கொண்ட 375 ஓட்டங்க ளுக்கு பதிலளித்து துடுப்பெடுத்தாடிய இலங்கையணி - 248 ஓட்டங்களை மட்டுமே பெற்று, 121 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இந்தப் போட்டித் தொடரில் இலங்கையணியினர் கைநழுவ விட்டமைக்கு, இலங்கையணியினரின் மோசமான களத்தடுப்பும் முக்கிய காரணமாக அமைந்தது. அவுஸ்ரேலிய அணி சார்பாக அதிக ஓட்டங்களைப்பெற்ற அனைவரும் - ஒன்றிற்கு மேற்பட்ட ஆட்டமிழக்கும் சந்தர்ப்பங்களையோ அல்லது பிடிகளையோ வழங்கியிருந்தபோதும், இலங்கையணி வீரர்கள் அவற்றைக் கோட்டை விட்டனர். சில அவுஸ்ரேலிய வீரர்கள் ஓட்டமெடுககாத நிலையில், வழங்கிய சந்தர்ப்பங்களைக்கூட இலங்கையணியினர் கைவிட்டமையால், அவர்கள் சதங்களைக் குவித்தனர். இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது, மஹேல ஜெயவர்த்தன மட்டும் ஒரேமாதியான மூன்று பிடிகளைத் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக இலங்கையணியிடம் காணப்படும் 'கலைத்து துடுப்பெடுத்தாடும் தன்மை' இல்லாதது இந்தத் தோல்விகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. இதை நன்கு உணர்ந்திருந்த அவுஸ்ரேலிய அணியினர் - முதலாவது இனிங்சில் குறைந்தளவு ஓட்டங்களைப் பெற்றபோதும், இரண்டாவது இனிஙசில் அதிகூடிய ஓட்டங்களை இயன்றவரை பெற்றிருந்தனர். அத்துடன் இறுதி வரை போராடும் மனப்பான்மை இலங்கை வீரர்களிடையே குறைவாகக் காணப்படுகின்றமையும் இந்தத் தோல்விக்கு ஒருவகையில் காரணமாகின்றது.

இலங்கையணியின் துடுப்பாட்ட வரிசையைப் பொறுத்தவரையில் - ஆறு வீரர்களுக்கு மேல் சதங்களைப் பெற்றவரகளாகவும், ஏனையவர்கள் அரைச் சதங்களை தாண்டியவர்களாகவும் இருந்தபோதிலும் ஒரு தொடரைக்கூட வெற்றிபெறமுடியாமற் போனமை கவலைக்குரிய விடயமே.

அடுத்து இந்தத் தொடரின் கப்டனாக ஹசான் திலகரட்ன பொறுப்பற்ற ஒருவராகச் செயற்பட்டார் என்பதற்கு அப்பால், ஒரு கப்டன் என்ற வகையில் செயற்படாது, கீழ்த்தரமான செயல் ஒன்றையும் மேற்கொண்டார். கண்டி அஸ்கிரிய மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது தொடரின்போது, ஹசான் திலகரட்ன 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில், ஷேன்வோண் வீசிய பந்தினைத் தடுக்கமுற்பட்டபோது, துடுப்புமட்டையில் பட்டு, பின்னர் கால் காப்பில் பட்டு, 'கச்சாக' எழுந்தது. அவ்வேளையில் அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் அதனை பிடிக்கமுற்பட்டபோது, இலங்கையணித் தலைவர் முன்னேசென்று, துடுப்பு மட்டையை வீசி அதனைத் தடுக்க முற்பட்டார். ரிக்கிபொண்டிங் அதனைப் பிடியாக்கி ஆட்டம் இழக்கச் செய்ததால், அவுஸ்ரேலிய அணியினர் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. ஆனால், நடுவர் மைக் புரொக்கரால் ஹசான் திலகரட்ன எச்சரிக்கப்பட்டார். இது ஒரு களங்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும். அதுவும் ஒரு அணித்தலைவர் இவ்வாறு நடந்துகொள்ளக்கூடிய முறையல்ல. இவற்றைவிட தமக்குரிய ஒரு முக்கிய பொறுப்பிலிருந்து இலங்கையணியினர் தவறிவிட்டனர் என்றே கூறவேண்டும். அதாவது, ஷேன்வோணுக்கு விக்கெடடுக்களைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டிய தேவை இலங்கையணிக்கு இருந்தபோதும், அதை அவர்கள் செவ்வனே செய்யவில்லை. அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள்கூட பொறுப்பின்றி ஆடி, ஷேன்வோணின் விக்கெட்டுக்களின் எண்ணிக்கைக்கு உதவினர்.

இந்தப் போட்டித் தொடரின்போது, இலங்கையணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் - 500 விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்டமை இலங்கை ரசிகர்களைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியான விடயமே. அதே நேரம், நீண்டதொரு இடைவெளிக்குப் பின்னர் இந்தப் போட்டித் தொடரில் கலந்துகொண்ட அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோண் - 500 விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்டமை பாராட்டுதலுக்குரியதாகும். என்னதான் இருப்பினும் இலங்கை ரசிகர்களைப் பொறுதத வரையில் இந்தப்போட்டித் தொடர் ஏமாற்றம் மிகுந்த ஒன்றாகவே அமைந்துவிட்டது.

- லெஸ்லி

தேர்தல் 2004 முடிவுகள் - நோக்கம் - 1

க.ஐங்கரன்

# தமிழ் தேசியத்தின் எழுச்சியும் சமாதானத்திற்கான அறிவுறுத்தலும்

**சர்வதேச சமூகத்தின் தலையீடும் எத்தகைய நெருக்கடிக்கும் உள்ளாக வாய்ப்புள்ளது என்பதை கோடிட்டுக்காட்டியுள்ளது. சர்வதேச சக்திகளின் துணையின்றி, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இன்றி இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியையோ, சமாதானத்தையோ ஏற்படுத்த முடியாது என்பது புதிய அரசுக்கு உருவாகவுள்ள நெருக்கடியாக அமையும். அதனைப் புதிய அரசு எப்படிச் கையாளப்போகின்றது என்பதும் கவனத்திற்குரியது. வடக்கு - கிழக்கு பற்றி ஜே.வி.பியின் பார்வையும், கடுமையான அணுகுமுறையும் ஜனாதிபதியின் அரசியலுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் உள் கட்சி அரசியல் இழுபறியாக மாற வாய்ப்புண்டு என்பதையும் மறுக்கமுடியாது.**

நடந்து முடிந்த தேர்தல் பரபரப்பான முடிவுகளை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் என்றுமே இல்லாத அமைதியான, சுமுகமான தேர்தல் மட்டுமன்றி, மக்களின் உற்சாகமான பங்களிப்பையும் அவதானிக்க முடிந்தது.

இந்தத் தேர்தல் இரண்டு பிரதான பிரதேசங்களது தனித்துவங்களை வெளிக்கொண்டுவந்துள்ளது. இயல்பாகப் பேசப்படும் வடக்கு அரசியல் (தமிழரின் வடக்கு-கிழக்கு), தென்னிலங்கை அரசியல் (சிங்களவரது தென்னிலங்கை) என இரண்டாக வேறுபடுத்திக் காட்டுகின்ற அரசியலைத் தெரியப்படுத்தியுள்ளது. எனவே, இந்தக் கட்டுரை இரண்டு பிரதேச மக்களது உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாகக் காட்டுகின்றது.

முதலில் வடக்கு - கிழக்கு அரசியல் பற்றி அவதானிப்போம். 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து தற்போதைய தேர்தல்வரை, தேர்தலுக்கான மக்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்பட்டது. அதுமட்டுமன்றி இராணுவக் கட்டுப்பாடு, சுதந்திரமான பிரதேசம், விடுவிக்கப்பட்ட பிரதேசம் என வடக்கு - கிழக்கு முழுவதும் வாக்களிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது.

இந்தமுறை அனைத்தும் தகர்க்கப்பட்டு, அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளமை- பங்களிப்பு அரசியலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது. அது மட்டுமன்றி, கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பமாகவும், வாக்களிப்பை ஒரு உரிமை தொடர்பான அம்சம் என்பதையும் உணர்த்தியுள்ளதை அவததானிக்க முடிகிறது. தமிழ் மக்களை இதுவரை நெருக்கடிக்கு உள்ளாக்கியிருந்த அரசியலைப் பற்றி தெளிவான உணர்வை தென்னிலங்கைக்கும், சர்வதேச சமூகத்திற்கும் காட்டியுள்ளனர். 50 வீதமான வாக்குப் பதிவு நிகழ்ந்துள்ளமை சிறந்த அரசியல் பங்களிப்பென கூறமுடியாது விட்டாலும், கடந்தகால தேர்தலோடு ஒப்பீடு செய்யும்போது (1994 ஆம் ஆண்டு 2.05 சதவீதம்) மிகச்சிறந்த பங்குபற்றலாக உள்ளது.

அடுத்து வடக்கு - கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை உறுதி செய்துள்ளமையை - இன்னோர் விழிப்புணர்வான அரசியல் மாறுதலாக உள்ளது. வெளிப்படையாக தமிழரசுக் கட்சிக்கு அதிக வாக்குகளை வழங்கியிருந்தமை, தமிழ்த் தேசியத்தின் பலத்தை காட்டுவதற்கான அணுகுமுறையாக உள்ளது. பல் வேறுபட்ட நெருக்கடிகளின் மத்தியில் தமிழ்த் தேசியத்தின் விருப்பைப் பற்றி பிறசக்திகளும், ஊடகங்களும் கேள்வி எழுப்புகின்ற போது, இந்த முடிவு அவர்களுக்கு நல்ல பதிலாக அமையும்.

தமிழரசுக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் - விடுதலைப் புலிகள் ஏகப் பிரதிநிதிகள், தமிழர் தாயகம், சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான தீர்வு, வடக்கு - கிழக்கு ஐக்கியம் போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை தமிழ் மக்கள் ஏற்றுள்ளார்கள் என்பதைக் காட்டுவதுடன், சமாதானத்தின் பக்கம் தங்கள் கருத்தினை வெளிப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பது அவதானிக்ககூடிய இன்னொரு அம்சமாகும். அளிக்கப்பட்ட வாக்குகளில் தமிழ் அரசுக் கட்சி 80 சதவீதத்திற்கும் மேல் வாக்குகளைப் பெற்றுள்ளது.

வன்னி மாவட்ட வாக்காளர்கள் அதிகமான பங்களிப்பைக் செய்திருப்பதும், தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்கும், இயல்பான அரசியல் நீரோட்டத்திற்கும் அவர்கள் பங்களிப்பு செய்துள்ளனர் என்பது புலனாகிறது. தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையைக் காட்டும் தேர்தலாகப் பிரசாரப்படுத்திய தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த வெற்றி - தமிழ் தேசியத்திற்கு கிடைத்த வெற்றியாகவே கொள்ளப்படுதல்வேண்டும். வன்னி மக்கள் வாக்குரிமையைப் பற்றிய உயர்ந்த மதிப்பீட்டையும் அதன் தனித்துவத்தையும் உணர்ந்துள்ளமை வாக்களிப்பு நிலையங்களை அவதானித்தபோது காணமுடிகின்றது.

கிழக்குப் பகுதியைப் பொறுத்தவரையும் தமிழரசுக் கட்சியும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. அதுமட்டுமல்ல, அண்மைக் காலத்தில் கிழக்கில் நிகழ்ந்துவரும் அசம்பாவிதங்கள் மத்தியிலும் திருகோணமலை மக்கள் மட்டுமன்றி, மட்டக்களப்பு வாக்காளரும் தம்மால் முடிந்த பங்களிப்பை வழங்கியுள்ளனர். அனைத்து எதிர்ப்புக்களையும், மிரட்டல்களையும் தாண்டி தமிழ்த் தேசியத்திற்காக வாக்களித்துள்ளமை அவர்களின் பங்களிப்பை காட்டுவதுடன், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதற்கு எதிரான சக்திகளுக்கு எச்சரிக்கையாகவும் விளங்குகிறது.

கிழக்கில் முஸ்லிம்கள் பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் அதிகமாக வாக்களித்துள்ளமையும், முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்துள்ளமையும் சமாதானத்தின் பக்கம் அளிக்கப்பட்ட ஆதரவைக் காட்டுவதாக உள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்பதைவிட, மக்கள் சமாதான சக்திகளையே, நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும் எனக் கருதியிருந்தமை கவனிக்கத்தக்கது.

எனவே, ஒட்டுமொத்தமான வடக்கு - கிழக்கு தேர்தல் முடிவுகளை அவதானிக்கும்போது - தமிழ்த் தேசியம், விடுதலைப் புலிகளே எங்கள் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், சுயநிர்ணயத்திற்கு உட்பட்ட தீர்வைத்தராதுவிடின் பிரிந்துசெல்வது தவிர்க்கமுடியாதது என்பதை ஜனநாயக முறைப்படி சர்வதேச சமூகத்திற்கும், தென்னிலங்கை சக்திகளுக்கும் உணர்த்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் ஜனநாயகப் பங்களிப்பை உலகம் ஏற்றுக்கொள்வதே ஜதார்த்தமான அரசியலாக அமையும். அதனையே இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அடுத்து, தென்னிலங்கை அரசியலில் எதிர்பார்த்ததைவிட சற்று மாறுபட்ட மாற்றங்கள் வேகமாக நிகழ்ந்திருக்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட சமாதான அரசியல் பற்றி தென்னிலங்கை வாக்காளர்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. மாறாக கடந்த காலங்களைவிட வெகு அமைதியாகவும், அதிகளவான விகிதத்திலும் தமது வாக்களிப்பை அளித்துள்ளதுடன், போரற்ற பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்களில் அதிக கவனத்தை செலுத்தத் தவறிவிட்டார்கள் என்றே பரவலான விமர்சனம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அந்த விமர்சனத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி புதிதாக ஏற்படுத்திக் கொண்ட கூட்டணியே அத்தகைய பலத்தை சேர்த்துள்ளது என்பதையும் இணைத்துக்கெண்டால் நன்றாக அமைந்திருக்கும்.

தென்னிலங்கை மக்களின் நடத்தையில் அதிக மாற்றத்தை காணமுடியாதநிலை என்பதுடன், அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை, சம்பள உயர்வு, வேலைவாய்ப்பு, வாழ்க்கை செலவீனம் போன்ற விடயங்களே அதிக கவனத்தைக் கொண்டிருக்கின்றது. தபால்மூலமான வாக்குகள் புதிய கூட்டணிக்கு அதிகரித்துள்ளமை - ஏனைய வாக்காளரை மதிப்பீடுசெய்ய போதுமானதாக அமையும். அந்த வகையில் இலங்கைத் தேர்தல் முறைமையையும் இந்த விடத்தில் அதிக செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

ஆனால், தென்னிலங்கை அரசியல் மாற்றத்தால் இழுபறியற்ற, அதிகாரப் போட்டியற்ற அரசியல் ஒன்று சாத்தியப்படுவதுடன், சமாதான வழிமுறைக்கு எத்தகைய வழிமுறையை முன்வைக்கப்போகின்றது என்பதே முக்கியமான பிரச்சினையாக எழுந்துள்ளது. இவ்வாறான தேர்தல் முடிவுகளின் மூலம் போரை தென்னிலங்கை மக்கள் விரும்புகின்றார்கள் என்பதைவிட, வேறுபல காரணங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக புதிய கூட்டணியின் ஜே.வி.பி.யின் பிரசன்னம் - மாறிமாறி அலுத்துப்போன பழைய கட்சி அரசியல் தலைமையிலிருந்து மாறுதலை ஏற்படுத்துகின்ற போக்குப் பற்றி வாக்காளர்கள் கருதியிருக்கலாம். மேலும், தமது அடிப்படை பிரச்சினைகளில் கவனத்தை செலுத்தியதுடன், போர் இலங்கையின் தலைநகரத்தைத் தவிர வேறு பகுதிகளில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையும், காரணமாக அமைந்திருக்கலாம்.

எது எவ்வாறாக அமைந்திருந்தாலும், தென்னிலங்கை வாக்காளர்கள் புதிய அரசை நோக்கி தமது கவனத்தை செலுத்தியுள்ளனர். இதனால், வடக்கு - கிழக்கு மக்களின் அரசியலும் சர்வதேச சமூகத்தின் தலையீடும் எத்தகைய நெருக்கடிக்கும் உள்ளாக வாய்ப்புள்ளது என்பதை கோடிட்டுக்காட்டியுள்ளது. சர்வதேச சக்திகளின் துணையின்றி, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இன்றி இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியையோ, சமாதானத்தையோ ஏற்படுத்தமுடியாது என்பது புதிய அரசுக்கு உருவாகவுள்ள நெருக்கடியாக அமையும். அதனைப் புதிய அரசு எப்படிக் கையாளப்போகின்றது என்பதும் கவனத்திற்குரியது. வடக்கு - கிழக்கு பற்றி ஜே.வி.பியின் பார்வையும், கடுமையான அணுகுமுறையும் ஜனாதிபதியின் அரசியலுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் உள்கட்சி அரசியல் இழுபறியாக மாற வாய்ப்புண்டு என்பதையும் மறுக்க முடியாது.

ஆனால், வடக்கில் பிராந்திய சக்தியின் ஊடுவல் தோற்கடிக்கப்பட்ட அளவிற்கு தென்னிலங்கையில் ஏற்படவில்லை என்பதும், அது இனிவரும் அரசியலில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

எனவே, வடக்கு - கிழக்கில் தமிழ் தேசிய ஒருமைப்பாடு பெற்றுள்ளதுபோல் தென்னிலங்கையில் சமாதானம், பொருளாதார அபிவிருத்தி தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் 2004 முடிவுகள் - நோக்கம் - 2

த.அறிவன்

# தேர்தல் 2004 தென்பகுதிக்கும் சர்வதேசத்திற்கும் சொல்லும் செய்தி...

தமிழ் மக்கள் 1977 ஆம் ஆண்டின் பின் மீண்டும் ஒரு செய்தியை தென்னிலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் வலுவாக இந்தத் தேர்தல் மூலம் சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் தம் பக்கமே என்று கடந்த காலத்தில் சந்திரிகா அரசு கூறியபோது அது பொய்யென தமிழ் மக்கள் உணர்ந்தனர்.

இதன் பின்னரான ஒரு அமைதிச் சூழலில் உலகம் ஏற்றிருக்கின்ற ஒரு ஜனநாயக (?) முறைமூலம் மீளவும் தமிழ் மக்கள் தம் உரிமைகளுக்கான கருத்தினை வாக்குகள் மூலம் இறுக்கமாக சொல்லியிருக்கின்றனர்.

குறிப்பாக அந்நிய சக்திகளின் கைக்கூலியாக தமது சுயநல அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் நோக்குடன் செயற்பட்ட கட்சிகளும், குழுக்களும், தேச விரோதிகளும் மேற்கொண்ட மிக அதிகளவிலான நெருக்கடிகளுக்கும் மத்தியில் அவர்களை நிராகரித்து அவர்களுடைய நோக்கங்களை புறந்தள்ளியும் தமிழ் மக்கள் செயற்பட்டுள்ளார்கள். குறிப்பாக மட்டக்களப்பில் தமிழர்கள் மேற்கொண்ட அதிகளவிலான வாக்களிப்பு இதனை வெளிப்படுத்தியுள்ளது. திருகோணமலையில் தமிழருக்கு சராசரியாக முஸ்லிம்களும், சிங்களவர்களும் இருந்தபோதிலும், மிகவும் அதிகளவில் மக்கள் வாக்களித்து 2 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு பெற்றுக்கொடுத்து வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. கொழும்பு ஊடகம் ஒன்று திருகோணமலை மக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுள்ளனர் என்ற தலைப்புச் செய்தியை வெளியிட்டுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டின் பின்னர் முல்லைத்தீவு, மன்னார் மக்கள் முழுமையாக வாக்களித்து முழுமையான தாயக விடுதலைக்கான தமது கருத்தினை வெளியிட்டுள்ளனர். வவுனியா சிங்களக் குடியேற்றவாசிகளால் அங்கு ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கு ஒரு ஆசனம் சென்று சேர்ந்துள்ளது. புளொட்க்கு ஒரு ஆசனம்கூட கிடைக்காதது ஒரு புதிய செய்தியை கூறியுள்ளது.

அடுத்த மிக முக்கிய களம் யாழ்ப்பாணம். தமிழர் தாயகத்தின் முதன்மை வாக்கு வங்கி இது. இது தேசவிரோதிகளின் சக்திகள், கைக்கூலிகள் மிக வலுவாக செயற்பட்டது இங்குதான். இதற்கு துணையாக யாழ்ப்பாணத்தில் அதிக மக்களை சென்றடையும் இரணடு பிரதான ஊடகங்களில் தமிழின விரோதக் குழுக்கள் கவர்ச்சியான விளம்பரங்களை பிரசுரித்தும் தேர்தல் காலத்தில் தாங்கள் செய்த குற்றங்களை (பாலியல் வல்லுறவு, தாக்குதல்கள், மிரட்டல்கள்) அனைத்தும் மேற்கொண்ட செயற்பாடுகளினை யாழ்ப்பாண மக்கள் நிராகரித்துள்ளனர். கிளிநொச்சி மக்களுக்கான மேற்கொண்ட பரப்புரையை கிளிநொச்சி மக்கள் முற்றாக நிராகரித்தமையை அவர்கள் வழங்கிய முழுமையான வாக்குகள் மூலம் தெளிவாகியுள்ளது. 98 வீதம் கிளிநொச்சி மக்கள் வலுவான தமது உரிமைகளுக்கான வாக்குகளை சொல்லியிருக்கின்றனர்.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் மூலம் இனத் துரோகிகளை நிராகரித்துள்ளனர். தேசத்துரோக்கிகளுடன் ஒத்து செயற்பட்டவர்களை, ஊடகங்களை அவற்றின் கருத்துக்களை நிராகரித்துள்ளனர். தமிழ் மக்கள் வரலாறு காணாத வெற்றியை கொடுத்துள்ளனர். யாழ்ப்பாண மக்கள் முழுமையாக வாக்களிக்கவில்லை என்பதும் அதற்கு வாக்காளர் அட்டைகள் அவர்களுக்கு முழுமையாக வழங்கப்படாதது ஒரு காரணம் என்பதும் கருத்தில் எடுக்கவேண்டியதொன்றாகும். யாழ்ப்பாணத்தில் சில குழுக்களுக்கு கிடைத்த சிறியளவிலான வாக்குகளும், பெரும்பாலாலும் கள்ள வாக்குகளே என்பதும் குறிப்பிடவேண்டியதாகும்.

இதிலும் குறிப்பாக தீவகமே ஈ.பி.டி.பிக்கான வாக்கு வங்கி என்பதையும், தீவக மக்கள் நிராகரித்துள்ளனர். இந்தத் தேர்தலில் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் தமது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான அவசியம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை வலுவான முறையில் கூறியிருக்கின்றன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை.*
- திருக்குறள்

# நமது நோக்கு

## புதிய அரசும், சமாதான முன்னெடுப்பும்...

இலங்கையின் அரச பீடத்தில் மீண்டும் ஒரு ஆட்சி மாற்றம் இரண்டாண்டு கால இடைவெளியில் ஏற்பட்டுள்ளது.

13 ஆவது நாடாளுமன்றத்துக்காக நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியை தென்பகுதி மக்கள் ஆட்சியில் அமர்த்த முடிவு செய்து விட்டார்கள் என்றே கூறமுடியும்.

கடந்த பொதுத் தேர்தலின் போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மக்களின் ஆணையை ஏற்று ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு தான் வாக்குறுதியளித்ததைப் போன்று நோர்வே அரசின் ஏற்பாட்டின் பேரிலும் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனும் கடந்த இரண்டாண்டு காலமாக சமாதானப் பேச்சுக்களை நடத்தியதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்டு போர்நிறுத்தத்தையும் கடைப்பிடித்து என்னவோ உண்மையான ஒன்று தான். எனினும் சமாதானத்தின் பெறுபேறாக தென்பகுதி சிங்கள மக்களும், அரசாங்கமும் எத்தனையோ அநுகூலங்களைப் பெற்றபோதும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் எதுவுமே நிறைவேறவில்லை என்பதும் உண்மையாகும்.

இருப்பினும் சமாதான முயற்சிகள் ஆரம்பத்தில் முயல்வேகத்தில் நகர்ந்து பின்னர் இடையில் நத்தை வேகத்தில் ஊர்ந்து முடிவில் அசைவற்ற தேக்க நிலையினை அடைந்த போதிலும் கூட மீண்டும் போர் ஆரம்பிக்கும் சூழலை இருதரப்பினரும் தவிர்த்து வந்தமை குறிப்பிடத்தக்கது. சில சந்தர்ப்பங்களில் மோதலை ஏற்படுத்தும் நோக்கில் படைத்தரப்பினரால் எரிச்சலூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் விடுதலைப்புலிகள் பொறுமை காத்ததன் மூலம் அந்த அபாயம்தவிர்க்கப்பட்டதுடன் சமாதான சூழல் தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தது.

விடுதலைப்புலிகளால் இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்ட வரைபு அரசின் பார்வைக்கு கையளிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட அதிரடி ஜனநாயக விரோத நடவடிக்கைகள் காரணமாக இறுதியில் பிரதமர் ரணில் தலைமையிலான ஆட்சி கலைக்கப்பட்டதையடுத்தே புதிய தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இப்போது தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில் ஆட்சிமாற்றம் ஒன்று தவிர்க்க முடியாத தென்பகுதி மக்களின் விருப்பத் தெரிவாகியுள்ளது.

இந்த விருப்பத் தேர்வின் மூலம் தென்பகுதி மக்கள் சொல்லும் சேதி குறித்த எண்ணங்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பவே செய்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் தென்பகுதி மக்கள் குறிப்பாகச் சிங்கள பெரும்பான்மை சிங்கள மக்கள்- என்ன சொல்லவிரும்புகிறார்கள் என்பதும் ஆழமாக யோசிக்க வேண்டிய விடயமாகும்.

ஆரம்பம் முதலே நோர்வே அரசின் அனுசரணையுடனான சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து கடும் விமர்சனங்களுடன் கூடிய எதிர்ப்பினை முதலில் மறைமுகமாகவும், இறுதியில் பகிரங்கமாகவும் வெளிக்காட்டி வந்த ஜனாதிபதி சந்திரிகா மற்றொரு இனவாத சமாதான விரோத சக்தியான ஜே.வி.பி யினருடன் இணைந்து உருவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையே தங்களின் தேர்வாக எடுத்து ஆட்சிபீடத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

ஆகவே, இந்த தேர்வினை மேற்கொண்டதன் மூலம் சமாதான முன்னெடுப்புக்கள் மேலும் தொடரக் கூடாது, இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வமானதும், நிரந்தரமானதுமான அரசியல் தீர்வொன்றினை நோர்வே அரசின் அனுசரணையுடனும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் எட்டும் முயற்சிகளை சாத்தியமாக்கக் கூடாது என்பதில் ஆர்வம் கொண்டுள்ளார்களா?

இந்தக் கேள்வி இயல்பாகவே எழுவது நியாயமானதே.

தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரையொன்றில் புதிய ஆட்சியை அமைக்கும் எவரும் விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டிய அவசியம் உள்ளது எனக் கூறியிருந்தார்.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் பெற்ற பெருவெற்றி மூலம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைத் தமது ஏகப்பிரதிநிதகளாக ஏற்றுக் கொண்டுள்ளதையும் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இந்த நிலையில் புதிய அரசு சமாதானத்தையும், அமைதியையும் தொடர்வதற்கான பேச்சுவார்த்தையை நடத்த விருப்பார்வம் கொண்டிருக்குமேயானால் விடுதலைப் புலிகளுடன் பேசியே தீரவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பது இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

- புதிய அரசு இதனைச் செய்யுமா?
- அடுத்து வரும் வாரங்களில் தெரியும்.

## நாடும் நடப்பும்




# ஐரோப்பா வாழ் ஈழத்தமிழர்களின் பொங்கு தமிழ் வாழ்த்துச் செய்தி

ஐரோப்பா வாழ் இலங்கைத் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா நியூகினி நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் அமைப்புக்களின் ஒன்றியமான தென்துருவத் தமிழர் சம்மேளனம் வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாளைமறுதினம் சுவிஸ் நாட்டில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முன், ஐரோப்பாவாழ் ஈழத்தமிழர்கள் பொங்கு தமிழ் காண அணிதிரள இருப்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

ஈழத்தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்னும் கோட்பாடுளை உள்வாங்கி நிற்கும் பொங்குதமிழ் ஓசை - சுவிஸ் நாட்டின் வானைப் பிளக்கட்டும்.

பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய உலகால் உறிஞ்சப்படாது எமது முகங்களையும், முகவரியையும் பாதுகாத்து வாழ்வதற்கான போராட்டத்தின் வடிவங்களில் ஒன்றே பொங்குதமிழ்.

வரலாறு என்பது தன்னியக்கம் உடையதல்ல. வரலாற்று மாற்றத்திற்கு தனிமனிதர்களின் குறுக்கீடு அவசியமாகின்றது. ஆற்றல்மிக்க, அருமைமிக்க, தனித்துவம் மிக்க வரலாற்று நாயகன் தமிழ் இனத்தின் வரலாற்றை முன்நின்று நகர்த்துகின்றான். நீங்கள் காணும் பொங்குதமிழ் அந்த காவியநாயகனின் கரங்களை வலுப்படுத்தும் என நம்புகின்றோம்.

பொங்குதமிழ் இலட்சியம் வெற்றிபெற, அதன் வேட்கையை சர்வதேச சமூகம் உள்வாங்கி செயற்பட, நீங்கள் எடுக்கும் முயற்சிகள் கைகூட வாழ்த்துகின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உணவு, சிற்றுண்டி நிலையங்களில் சுகாதாரம் பேணும்படி உத்தரவு

வலி.தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட - சுன்னாகம், மருதனாமடம், இணுவில் பகுதிகளிலுள்ள தேநீர்ச்சாலை, உணவுச் சிற்றுண்டி நிலையங்களில் உணவு உட்கொள்ள வருபவர்களின் சுகாதாரத்தை பேணும் வகையில், குடிநீர் வைக்கப்பட்டுள்ள பெரிய தொட்டிகளுக்கு பைப் (ரப்) பூட்டவேண்டுமென பொது சுகாதார பரிசோதகரால் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பலரும் குடிநீர் தொட்டிகளுக்குள் கை வைத்து அள்ளுவதால் - வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதாகத் தெரியவருகிறது. அத்துடன், உணவுகளைக் கையால் எடுத்து பரிமாறாது, அதற்குரிய கரண்டிமூலம் பரிமாறும்படியும், சமைக்கும் இடத்தில் இலையான், எறும்பு போனறவை இல்லாமல் நன்கு பராமரிக்குமாறும், வேலை செய்யும் பணியாளர்கள் மருந்துவப் பரிசோதனையை மேற்கொண்டிருக்கவேண்டுமெனவும், இவை இந்தமாத இறுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (101)

### எ.எம்.ஜயரத்ன தெரிவிப்பு

# புதிய அரசாங்கத்தை தாங்களே அமைப்பார்களாம்

புதிய அரசாங்கத்தை தாங்கள்தான் அமைக்கப் போவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் - நடந்து முடிந்த தேர்தல் வன்முறைகள் சிறிய அளவில் இடம்பெற்ற போதிலும், அவை முடிவுகளை மாற்றும் வகையில் அமைந்துள்ளது.

எனினும், இந்த வன்முறைகள் பற்றி தேர்தல் ஆணையாளருக்கு விரிவாகக் கடிதம்மூலம் அறிவிக்க உள்ளேன்.

இதேவேளை, இந்தத் தேர்தல் வன்முறைகள் இன்றி இடம் பெற்றுள்ளதாகவும், தேர்தல் நீதியாக நடந்துள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் கப்புகொட்டுவ தெரிவித்தார். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படாமல், இந்தத் தேர்தல் இடம்பெற்றுள்ளது. இன்றும் தேர்தலின் பெறுபேறுகள் கிடைத்த பின்புதான் எந்தக்கட்சி ஆட்சி அமைக்கும் என்பதைத தீர்மானிக்கலாம் என்றும் கப்புகொட்டுவ மேலும் தெரிவித்தார்.

# வன்னி மாவட்டத்தில் இருந்து பெருந்திரளானோர் வாக்களிப்பு

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர். எந்தவித அசம்பாவிதங்களும் இன்றியே வாக்களிப்பு இடம்பெற்றது. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் - இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் நேற்றுமுன்தினம் நண்பகலே ஓமந்தையில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்களிப்பு நிலையத்திற்கு வந்திருந்தனர்.

காலைமுதல் வாக்குச்சாவடிக்கு திரண்டிருந்த மக்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர். நண்பகல் 12 மணிக்கு முன்னதாக 50 வீதமான வாக்காளர்கள் வாக்களித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 34 ஆயிரம் வாக்காளர்கள் மூன்றுமணிவரை வாக்களித்தனர். ஓமந்தைப் பகுதியில் மக்கள் முதல்நாளே திரண்டிருந்தமையால், வாக்களிப்பு நிலையத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகளைக் கடமையிலிருந்த பொலிஸார் ஒழுங்கமைத்தமையால், மக்கள் இலகுவாக வாக்களிக்கமுடிந்தது. இது உள்ளூர் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்களை ஆச்சரியமடைய வைத்திருந்தது எனவும் தெரிவித்தார்.(03)

**தேர்தல் 2004 உணர்த்தும் செய்தி...** **எஸ்.எம்.ஜி**

# ஈழத்தமிழ் மக்கள் மீண்டும் தேர்தல் மூலம் வழங்கியுள்ள ஆணை





நமீபியா என்றொரு நாடு இன்று இருக்கிறது. பெரும் போராட்டம் நடத்திப் பல்லாயிரக் கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்தபின் நடந்த பொதுத் தேர்தலில் நமீபியா மக்கள் தமக்கு விடுதலைவேண்டும் என்று ஒட்டு மொத்தமாக வாக்களித்து தமது கோரிக்கையை உறுதிப்படுத்தினர்.

நமீபியா விடுதலை பெற்று, இன்று அது ஒரு சுதந்திர நாடாகத் திகழ்கிறது. உலக அரங்காகிய ஐக்கிய நாடுகள் சபை யில் நமீபியாவும் அங்கம் பெற்றிருக்கிறது.

எதியோப்பியாவில் எரித்திரியா என்றொரு மாகாணம் இருந்தது. எரித்திரியா மக்கள் தங்களுக்கு விடுதலைவேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டத்தைத் தீவிரவாதிகளின் புரட்சி என எதியோப்பிய அரசு அடக்குவதற்கு முயற்சித்தது. போராட்டம் நீடித்தது. இறுதியில் பொதுத் தேர்தல் நடாத்தி எரித்திரியா மக்களின் கருத்துக் கேட்கப்பட்டது. எரித்திரிய மக்கள் தங்களுக்கு விடுதலை வேண்டும் என்று ஒரேகுரலில் தங்கள் கருத்தை வெளியிட்டார்கள்.

எரித்திரியா விடுதலை பெற்று இன்று சுதந்திர நாடாக விளங்குகிறது.

கிழக்குத் தைமூர் என்று இன்று அழைக்கப்படும் நாடும் சமீபத்தில்தான் பிலிப்பைன்ஸிலிருந்து விடுதலை பெற்று சுதந்திர நாடானது. இதுவும் போராட்டங்கள் நடத்தி, தியாகங்கள் செய்தபின் கடந்த பொதுத் தேர்தலில் விடுதலைவேண்டும் என்று மக்கள் அறிவித்த தீர்ப்பினால் விடுதலை பெற்றது.

பாகிஸ்தானில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் மேற்குப் பாகிஸ்தானின் அடக்குமுறையை எதிர்த்து ஷேக் முஜியூர் ரஹ்மான் தலைமையில் போராடினார்கள். கிழக்குப் பாகிஸ்தானுக்கு விடுதலைவேண்டும் என்று கோரினார்கள் மேற்குப் பாகிஸ்தான் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடந்தது. கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் ஷேக் முஜியூர் ரஹ்மான் தலைமையிலான அவாமிக் கட்சிக்கு அமோக ஆதரவளித்து, கிழக்குப் பாகிஸ்தான் விடுதலைக்கு வாக்களித்தனர். இதை மேற்குப் பாகிஸ்தான் ஆயுத படை பலத்தினால் அடக்கி ஒடுக்க முற்பட்டது. கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பாதுகாப்புத் தேடி இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்தனர். அகதிகளுக்கு உதவுவதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உட்படப் பல நாடுகள் முன்வந்தன. இதற்கு அரசியல் தீர்வேவேண்டும் என்று இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி நடவடிக்கை எடுத்தார்.

கிழக்குப் பாகிஸ்தான் வங்களாதேசமாக மலர்ந்துள்ளது. இன்று அது ஒரு சுதந்திர நாடு.

இலங்கையில் அந்நியர் ஆட்சி நீங்கிய பின் தமிழ் மக்கள் - சிங்களப் பெரும்பான்மையினரால் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் 'வாழு வாழவிடு' என்ற இலட்சியத்தை முன்வைத்து இணைப்பாட்சி கோரிக்கையைப் பெறுவதற்காகக் காந்தீய வழியில் நாடாளுமன்றத்திற்கு வெளியில் சாத்வீகப் போராட்டங்களும், ஜனநாயக முறையில் நாடாளுமன்றத்தினுள்ளேயும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

சாத்வீகப் போராட்டங்கள் அரச படைகளினதும், குண்டர்களினதும் ஆயுதங்களால் அடக்கி ஒடுக்கப்பட்டன.

இந்த நிலையில் 1976 ஆம் ஆண்டில் தமிழ்த் தலைவர்கள் தமக்குள் உள்ள வேறுபாடுகளைத் துறந்து ஒன்றுபட்டனர். இனி இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைக்க உறுதியெடுத்தனர்.

1977 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 'இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பதற்கு தமிழ் மக்களிடம் அவர்களது தாயகத்தில் ஆணையைக் கேட்டனர்.

இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பதற்கு 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் (முஸ்லிம்களும் தமிழர்களே) அமோக ஆதரவளித்து ஆணை வழங்கினர்.

தமிழ் மக்கள் அளித்த ஆணையைப் பொறுக்கமாட்டாத சிங்களப் பேரினவாதிகள் - காவல்துறையைச் சேர்ந்த சில காடையர்கள் மூலம் யாழ்ப்பாணத்தில் கலகத்தைத் தொடககி, நாடு முழுவதையும் இனக்கலகமாக்கினர். ஆட்சிபீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஜே.ஆர்.ஜயவர்த்தன எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல் இனக்கலகத்தைக் கொளுந்துவிட்டெரித்தார்.

இந்த இனக்கலகத்தைக் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் அளித்த ஆணை தடுக்கப்பட்டுவிட்டது.

இதன் பின்னர்தான் இலங்கையில் ஜனநாயகமும் சாத்வீகப் போராட்டமும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வழிசெய்யாது என்று தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தின்மூலம் தமிழ் மக்களுக்கு விடுதலை காணப்புறப்பட்டனர். பல குழுக்கள் தோன்றி ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்தன. இவற்றில் சில திசைமாறிச் சென்று மறைந்தன. இன்று சிலர் தங்கள் இலட்சியத்தை மறந்து எதிர்த்திசையில் சென்றுகொண்டிருக்கின்றன.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலட்சியத்திலிருந்து விலகவில்லை. இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்கு 1977 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் வழங்கிய ஆணையை, ஜனநாயக முறையில் அமைப்பதற்கு சிங்களப் பேரினவாதம் அனுமதிக்காததால், ஆயுதப் போராட்டம் மூலம் அமைக்க முன்வந்தது. இன்று தமிழர் தாயகத்தில் பெரும் பகுதி சிங்கள ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்று, விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இருக்கிறது.

இந்த நிலையில்தான் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பிறேமதாஸாவின் மரணத்தைத் தொடர்ந்து அதிர்ஷ்டவசமாக அதிபராக வந்த டி.பி.விஜயதுங்க - இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினைதான் இருக்கிறது என்று அடியெடுத்துக்கொடுத்தார். இதைத்தொடர்ந்து சந்திரிகா அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதப் பிரச்சினையாக அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்புடன் சேர்த்து தமிழின ஒழிப்புக்குத் திட்டமிட்டுச் செயற்பட்டார். இதற்கு வசதியாக அதிபர் சந்திரிகா சமாதானத்திற்கான பேர் என்ற புதிய சுலோகத்தை முன்வைத்ததால் போர் தொடர்ந்தது.

இலங்கையில் போர் தொடர்வது நிறுத்தப்படவேண்டும். சமாதானம் ஏற்படவேண்டும் என்ற யோசனையுடன் வெளிநாடுகள் சில தலையிடும்நிலை ஏற்பட்டது. இதேசமயம், கதிர்காமரும் சந்திரிகாவும் பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் விடுதலைப் புலிகளை வெளிநாடுகள் தடைசெய்யவேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தனர். இதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக கிறிஸ்மஸ் தினத்தை ஒட்டி ஒருமாதப் போர்நிறுத்தத்தை அறிவித்தனர். அரசும் இதேபோல் போர் நிறுத்தம் செய்யும் என்று எதிர்பார்தனர். இந்தப் போர் நிறுத்தம் 4 மாதங்கள் நீடித்தது. அரசு போரைத் தொடர்ந்தது. நான்கு மாத முடிவில் அரச படைகள் - புலிகள் மீது கடும் தாக்குதல் மேற்கொண்டபோது பெரும் இழப்பைச் சந்தித்தது.

இதன்பின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இருதரப்பும் பேச்சு நடத்த வேண்டும் என்று உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அழுத்தங்கள் அதிகரித்தன.

பேச்சு நடத்துவதென்றால் மூன்றாவது நாடு ஒன்றின் உதவியுடன் அல்லது மத்தியஸ்தத்துடன் நடத்துவதென்றால் நாங்கள் தயார் என்பதை விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

இதைச் சந்திரிகாவும் ஏற்றுக்கொண்டார். நோர்வேயுடன் இருதரப்பும் அனுசரணையாளராக ஒட்டிக்கொண்டது. பேச்சுக்கள் தொடங்கின. எதிர்பார்ப்புகள், ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்தன. அரசு போர் முரசு கொட்டிக்கொண்டிருந்தது. இந்த நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தல் பிரசாரத்தின்போது நோர்வே அனுசரணையாளராகச் செயல்படத் தயாரென்றுகூட பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அறிவித்தார்.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் பதவியேற்றார். விடுதலைப் புலிகள் மீண்டும் ஒருதலைப்பட்சமான ஒருமாதகாலப் போர்நிறுத்தத்தை அறிவித்தனர். ரணில் ஆட்சியும் போர்நிறுத்தம் அறிவித்தது.

இதன் பின் நோர்வேயின் அனுசரணையுடன் போர்நிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன கைச்சாத்திடப்பட்டன.

பேச்சுவார்த்தைகள் தொடங்கின, தொடர்ந்து நடந்தன. இலங்கைக்கு உதவ பல நாடுகளும் முன்வந்தன.

ஆனாலும், போரினால் பாதிக்கப்பட்டு வெளியேறிய மக்கள் - தாங்கள் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கும், புனர்வாழ்வளிப்பதற்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதாகக் காணோம்.

இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வுகாண்பதற்கு இலங்கையில் ஒரு நிலையான அரசு அமையவேண்டும். இதற்கிடையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் புனர்வாழ்வளிப்பதற்கு அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படவேண்டும். இந்த சபையே வெளிநாட்டு உதவிகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பயன்படச்செய்யும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

அரசாங்கம் ஒரு இடைக்கால நிர்வாக சபை யோசனையை முன்வைத்தது. இதில் திருப்தியடையாத விடுதலைப் புலிகள் - பல நாடுகளுக்கும் சென்று அரசியலமைப்பு நிபுணர்கள் பலருடனும் கலந்தாலோசித்து ஒரு வரைபைத் தயாரித்தனர்.

'இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை நிறுவுவதற்கான ஓர் உடன்படிக்கைக்கு தமிழ்மக்கள் சார்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனை' என்று அந்த வரைபை அரசிடம் புலிகள் சமர்ப்பித்தனர்.

புலிகளின் இனவாதத் தன்னாதிக்க அதிகாரசபை ஆலோசனைகள் - தமிழீழத்துக்கு வழிவகுக்கும் என ஜே.வி.பி. முதலிய பேரினவாதக் கட்சிகள் தெரிவித்தன. இந்திய ஊடகங்கவியலாளர்களும் அரசியல் நிபுணர்களும்கூட இது ஈழத்துக்கு வழி வகுக்கும் என்று சொன்னார்கள். சந்திரிகாவின் சுதந்திர கட்சியும் இதை எதிர்த்தது.

இது ஒஸ்லோ தீர்மானத்துக்கும் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும், இதை அடிப்படையாகக் கையாண்டு பேச்சு நடத்தலாம் என்று ரணில் அரசு கருத்து வெளியிட்டது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத்தேர்தலுக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார்.

மக்கள் நாட்டில் சமாதானத்தையே விரும்புகிறார்கள். சமாதானத்தை நோக்கிய நகர்வைக் கெடுத்தவர் சந்திரிகா என்ற பழியைத் துடைக்கவும், அரசாங்கம் பெரும் தவறுகள் செய்துவிட்டதாகக் காட்டவும் சந்திரிகா அம்மையார் படாதபாடுபட்டார். நாளொரு உத்தரவும் பதவிப்பறிப்புக்களும் செய்துவந்தார். தமது மாளிகைக்குப் பல தரப்பினரையும் அழைதது உபதேசம் செய்து வந்தார்.

சந்திரிகா நிலையான சமாதானம் பற்றிப் பேசுகிறார். சந்திரிகா அம்மையாரின் சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் - தமிழர் தாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லையென்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனால் மாநில சுயாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை!. ஆனால், ஒஸ்லோ மாநாட்டுத் தீர்மானத்தின்படி - சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறிவந்தார்.

சமாதான முயற்சிகள் நல்லதொரு கட்டத்தை நெருங்கிய சமயத்தில்தான் சந்திரிகா அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்பட்டாலும், இப்பொழுதே தமிழீழத்தின் ஒருபகுதி அதற்குத் தயாராக இருக்கிறது.

தன்னாதிக்க சபையும் இல்லை, தமிழர் தாயகமும் இல்லை என்றால், தமிழீழம் பெறுவதற்கும் தாயகம் தயாராகவே காத்திருக்கிறது.

இதற்கு சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் பெறுவதற்காகவே இந்தப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவரையும் தெரிவுசெய்தனுப்ப வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து செயற்பட்டனர்.

நமீபியா, எரித்திரியா போன்ற நாடுகளின் வரிசையில் தமிழீழமும் மலர்வதற்கு தமிழ் மக்கள் ஆணையிடுவதும், அங்கீகாரம் வழங்குவதும்தான் இந்தத் தேர்தல் என்பதை தமிழ் மக்கள் நினைவில் கொண்டு செயற்பட்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

**சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்பட்டாலும், இப்பொழுதே தமிழீழத்தின் ஒருபகுதி அதற்குத் தயாராக இருக்கிறது.**

**தன்னாதிக்க சபையும் இல்லை, தமிழர் தாயகமும் இல்லை என்றால், தமிழீழம் பெறுவதற்கும் தாயகம் தயாராகவே காத்திருக்கிறது.**

**இதற்கு சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் பெறுவதற்காகவே இந்தப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான தமிழரசுக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரையும் தெரிவுசெய்தனுப்ப வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து செயற்பட்டுள்ளனர்.**

# நேபாள மன்னரை பதவி விலகக்கோரி காத்மண்டுவில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(காத்மண்டு)

நேபாள மன்னர் கஜேந்திரா பதவியில் இருந்து வெளியேற வேண்டும் எனக் கோரி, மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களாக நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டங்களில் இதுவரை சுமார் 25 000 மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

மன்னரின் மாளிகையை நோக்கி முன்னேறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட மக்களைத் தடுக்க பொலிஸார் முற்பட்ட வேளையில் 50 பொதுமக்கள்வரை காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளதாகவும், முன்னாள் அமைச்சர் ஒருவரும் காயமடைந்ததாகவும் எதிர்கட்சியினர் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அண்மித்தவேளையில் பொலிஸார் குழாய்கள் மூலம் நீரை ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி விசிறியதாகவும், குண்டாந்தடிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒரு ஆண்டிற்குள் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு மன்னர் கஜேந்திரா இணக்கம் தெரிவித்தார். ஆனால், மாவோ தீவிரவாதிகளுடன் உடன் பேச்சுக்களை நடத்தவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஸ்லோவாக்கியாவில் ஜனாதிபதித் தேர்தல்

ஸ்லோவாக்கியாவில் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. ஜனாதிபதித் தேர்விற்காக 11 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

இந்தத் தேர்தலில் - வெற்றிக்குத் தேவையான 50 வீத வாக்குகளை எவரும் பெறப் போவதில்லை எனவும் - இதனால், இரண்டாவது முறையும் தேர்தல் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த தேர்தலானது ஒரு வாரத்தில் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்களில் முன்னாள் பிரதமர் விலாமிடர் மெசியரும் ஒருவரென அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் கணிப்பின் மூலம் ஸ்லோவாக்கியாவின் வெளிநாட்டமைச்சர் 'எகுராட் குகன்' முப்பது வீத வாக்குகளைப்பெறுவார் எனக் கருதப்படுகிறது.

# பிரிட்டன் பொலிஸாரின் மரணம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது



1984 ஆம் ஆண்டு லிபியத் தூதுவராலயத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றவேளையில் - தூதுவராலயத்திற்கு வெளியே காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பிரித்தானியப் பொலிஸாரான 'பெலெச்சர்' தூதுவராயலயத்திலிருந்து சுடப்பட்ட குண்டொன்றினால் கொல்லப்பட்டார்.

ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளைத் தற்போது மேற்கொள்ளவுள்ளனர். அடுத்த வாரம் பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் ஜக்ஸ்ரோவின் லிபிய விஜயம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விஜயத்தை மேற்கொள்வதற்கு முன் பி.பி.ஸிக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும்போது-

கொல்லப்பட்ட பொலிஸாரான 'பெலெச்சர்' இன் மரணம் அவரது பெற்றோருக்கு இன்னும் அதிர்ச்சியான சம்பவமாகவே அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை நான்கு துப்பறிவாளர்கள் லிபியத் தூதுவராலயத்தில் புலன் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். முக்கிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்வார்கள்.

பெலச்சரின் மரணத்தின் பின் தூதுவராலயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட 22 லிபியத் தூதுவராலய அதிகாரிகள்மீது, ஸ்கொட்லாண்ட் பொலிஸார் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சர்வதேச சமூகத்தின் மத்தியில் மீண்டும் லிபியாவை ஏற்றுக்கொள்வதற்கு - பெலெச்சரைக் கொலைசெய்த குற்றவாளியைத் தெரிவிக்க முன்வருவதும் ஒரு காரணமாக அமைந்திருந்தது.

இதேவேளை, 1999 ஆம் ஆண்டு இந்தக் கொலையில் லிபியா சம்பந்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றிருந்தபோதும், கடந்த பெப்ரவரியில் லிபியப் பிரதமர் சுக்கிரிகான் தமது நாடு இந்தக் கொலையில் சம்பந்தப்படவில்லை என பி.பி.ஸிக்குத் தெரிவித்திருந்தார்.

### குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதனால்

# ஸ்பெயின் ரயில் பயணங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் ஸ்பெயினின் மட்றிட்டிற்கும் செவிலிக்கும் இடைப்பட்ட பகுதியில் பிரயாணம் மேற்கொண்டிருந்த வேகரயில் ஒன்றில் வெடிக்காத குண்டுகள் கண்டுபிடிக்கட்ட பின்னர், ஸ்பெ யின் படையினர் கூடுதலான காவல் கடமைகளை மேற்கொண்டுள்ளனர்.

சென்ற மாதம் மட்றிட் ரயில் குண்டு வெடிப்பிற்கு பாவிக்கப்பட்டது போன்ற குண்டே தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சென்ற மாதம் நடைபெற்ற குண்டுவெடிப்பில் 191 பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர். இதனால் கண்காணிப்பிற்கென 45 ஹெலிகொப்டர்களும் மோப்ப நாய்களும், கவச வாகனங்களும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, உள்நாட்டமைச்சர் அசெஷ் தெரிவிக்கும் போது - இரண்டாவது குண்டு தொடர்பாக எதுவித முடிவையும் மேற்கொள்ள

உலக நோக்கு



வேண்டாமென மக்களைக் கேட்டுள்ளார். ஆனால், மீண்டும் ரயிலில் குண்டு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்ததும் மக்கள் அதிர்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுமுறைக்காக மக்கள் பெருமளவில் பொதுப்போக்குவரத்துக்களைப் பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வாசிங்டன் கருத்துத் தெரிவிக்கும்போது - மட்றிட்டில் நடைபெற்ற ரயில் குண்டு வெடிப்புக்கள் அமெரிக்காவில் தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்தியங்களை அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்திருக்கிறது.

# பலஸ்தீன துப்பாக்கிதாரியால் இஸ்ரேலியர் ஒருவர் சுட்டுக்கொலை

மேற்குக் கரைப்பிரதேசத்தில் யூதர்களின் குடியிருப்பு பகுதியில் - பலஸ்தீன துப்பாக்கிதாரியொருவர், இஸ்ரேலியர் ஒருவரைக் கொன்றதுடன் யூதப்பெண் ஒருவரையும் காயப்படுத்தியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீன நகரான தல்கரெமில் இருந்து யூதக் குடியிருப்புப் பகுதியை நோக்கித் தாக்குதலை மேற்கொண்டிருந்ததாகவும் பின்னர் இஸ்ரேலிய படையினரால் அந்தப் பலஸ்தீன துப்பாக்கிதாரி சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டு



தாக்குதல்களில் - காஸாப் பிரதேசத்தில் மற்றுமிரு பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட 3 பலஸ்தீனர்களும் தடுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பள்ளிவாசலில் இடம்பெற்ற தொழுகையின்பின் - பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய பொலிஸ் மீது கல் எறிந்ததாகவும் இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### சூடான் அரசுக்கு எதிராக

# சர்வதேசம் அழுத்தத்தைப் பிரயோகித்தல் வேண்டும்!

### ஐ.நா. அமைப்பு வேண்டுகோள்



சூடான் அரசிற்கும், அரசசார்பான குழுக்களுக்கு எதிராகவும் சர்வதேச நாடுகள் அழுத்தம் மேற்கொள்ள வேண்டுமென - ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

சூடானின் மேற்குப் பிரதேசமான டர்பூர் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு எதிராக, சூடானின் அரச படைகளும் அரசு சார்பான அராபியக் குழுக்களும் மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் தமக்கு நாளாந்தம் கிடைத்து வருவதாகவும்- ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முடியாதிருப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் அவசரகாலப் பணிகளின் இணைப்பாளர் ஜோன் எகிலாண்ட் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இவர் கருத்துத் தெரிவிக்கும் போது - சூடானில் அரசு அராபிய குழு ஒன்றின் உதவியுடன் இன அகற்றல் ஒன்றை மேற் கொண்டு வருவதாகவும் இதனால், சூடானிய அரசிற்கெதிராக அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

ஒரு ஆண்டிற்கு முன் 'டர்பூரை' தளமாகக் கொண்ட போராளிகளினால் அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமானது. அரசிற்குச் சொந்தமான சொத்துக்களின் மீது போராளிகள் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். சூடானில் வாழும் கறுப்பின ஆபிரிக்கர்களிலும் பார்க்க அராபியர்களுக்கு அதிக சலுகைகளை அளித்து வந்தமையே இந்தப் போர் ஆரம்பிப்பதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை பல ஆயிரக்கணக்கான சூடானியர்கள் தமது இருப்பிடங்களிருந்து வெளியேறி, எல்லை நாடான 'சாட்'டிற்குள் தஞ்சம் புகுந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அதிகாரி எகிலாண்ட் மேலும் தெரிவித்ததாவது -

உலகில் தற்போது நடைபெற்றுவரும் மோசமான மனித அவலங்களை அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் அனுபவித்து வருவதாகவும், கொலைகளையும் பாலியல் வல்லுறவுகளையும் அரசிற்குச் சார்பான அராபியக் குழுக்கள் நடத்தி வருவ்தாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு 115 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும் குறிப்பாக, அகதிகளின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு 30 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஐக்கிய நாடுகள்சபை அங்கு நடைபெற்றுவரும் உண்மையான தகவல்களை அறிவதற்கு குழு ஒன்றினைப் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு அனுப்பவுள்ளது.

அத்துடன், எல்லைநாடான சாட்டின் தலைநகர் நிட்ஜமெனாவில் போராளிக்குழுவும் அரச அதிகாரிகளும் போரை நிறுத்துவதற்கான பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம்
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
விபரங்கள் அறிய
யசோ
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2395)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வெற்றிதேடித்தந்த மக்களுக்கு சேனாதிராசா நன்றி தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்று தமிழரசுக் கட்சிக்கு 90 வீதமான வாக்குகளை அளித்து வெற்றிபெற உழைத்தமைக்காக தமிழ் மக்களுக்கு அதன் கட்சி நன்றி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்று மாலை அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

2004 ஆம் ஆண்டு 02 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தல் தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரை மிகமுக்கியமானதென்பதை தமிழ்த் தேசிய இனம் ஏற்றுக்கொண்டிருந்தது. தமிழ்த்தேச மக்கள் சுய நிர்ணய உரிமைத்தத்துவத்தின் அடிப்படையில் தங்கள் தாயகத்தில் தம் அரசியல் அதிகாரத்தைத் தீர்மானிப்பதற்காக இத்தேர்தலில் வாக்களிக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தது. அத்துடன் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தையும் அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டையும் அங்கீகரித்து வாக்களிக்குமாறும் கேட்டிருந்தோம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இத்தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாகவே ஆதரித்துப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையையும் 'எமது வேண்டுகோளையும் ஏற்றுப் பெருமளவில் குறிப்பாக யாழ்.தேர்தல் மாவட்டத்திலும் 90 சதவீதமாகன வாக்குகளை இலங்கைத் தமிழரசுக்கட்சிச் சின்னமான வீட்டிற்கு குவித்து மாபெரும் வெற்றி பெறவைத்துள்ளமைக்கு எம் தமிழ்மக்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## யாழ்.மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள்

| | | |
|---|---|---|
| இலங்கைத் தமிழரசக்கட்சி | 257320 | |
| ஈ.பி.டி.பி | 18612 | |
| சுயேட்சைக்குழு | 5156 | |
| ஐ.சோ.கட்சி - | 291 | |
| ஜாதிக ஹெல உறுமய | 95 | |
| புதயி இடது சாரி முன்னண- | 266 | |
| றுகுனு ஜனதாக் கட்சி | 67 | |
| முஸ்லிம் காங்கிரஸ் | 1995 | |
| சுகராஜ | 73 | |
| சுயேட்சைக்குழு | 151 | |
| மொத்தவாக்காளர்கள் | 644829 | |
| வாக்களித்தோர் | 303259 | 47.38% |
| செல்லுபடியற்றது | 21233 | |
| இடம்பெயர்ந்த வாக்காளர்களில் | | |
| கூட்டமைப்புக்கு வாக்களிப்பு | 1209 | |
| ஈ.பி.டி.பி க்கு வாக்களிப்பு | 443 | |
| சுயேட்சைக் குழுவுக்கு வாக்களிப்பு | 09 | |

# தமிழரசுக் கட்சிக்கு இம்முறை அம்பாறையில் ஒரு ஆசனம்

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு அம்பாறையில் ஒரு ஆசனம் கிடைத்துள்ளது.

சுமார் ஒரு லட்சத்து 5000 வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 72000 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 40000 வாக்குகளை அம்பாறையில் பெற்றுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 3 அல்லது 4 ஆசனங்கள் கிடைக்கும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு ஆசனம் கிடைப்பது உறுதியாகிவிட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 4 ஆசனங்கள் கிடைத்தால் முஸ்லிம் காங்கிரசுக்கு 2 ஆசனம் கிடைக்கும் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக்கட்சி தலா ஒவ்வொரு ஆசனங்களையும் கைப்பற்றும் நிலையில் இருக்கின்றது. அம்பாறையில் தமிழரசுக் கட்சியின் சார்பில் பத்மநாதன் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் முன்னணியில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

# தேர்தலின்போது 1500 வன்முறைகள் தலைமைக் கண்காணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பின்போது சுமார் 1500 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத் தேர்தல் கண்காணிப்பாளர் ஜோன் குஷ்னகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இனிவரும் தேர்தல் காலங்களில் இவ்வாறான வன்முறைகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அத்துடன், வடக்கு-கிழக்கு பகுதிகளில் வேட்பாளர்கள் சுயாதீனமாக பிரசாரங்களில் ஈடுபடாமை வருத்தத்தை அளிப்பதாக உள்ளது. அத்துடன், தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெற்று முடிவடைந்த பின்னர் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாமல் தேர்தல் நடவடிக்கைகள் நடைபெற்றமையானது தேர்தலின் நீதித்தன்மையையும், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் சிறப்பான நடவடிக்கையை வெளிக்காட்டுவதாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

ஐ.தே.க. முக்கியஸ்தர்கள்

# நாட்டைவிட்டு வெளியேறுவதாக ரூபவாஹினி மூலம் பொய்ப்பிரசாரம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் முக்கியஸ்தர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாக மாயையொன்றை, வதந்திச்செய்திகள் மூலம் உருவாக்கி தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் மனங்களில் இறுதி நேர மாற்றத்தை உருவாக்குவதற்கு மெற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து விசாரணைகள் நடத்த வேண்டுமென ஐ.தே.க செயலாளர் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேர்தலில் வாக்களிக்க மக்கள் செல்வதற்கு முன்னர் தொடர்ச்சியாக ரூபாவாஹினி இத்தகைய ஒரு பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டமையால் மக்கள் மனங்களில் இறுதி நேரத்தில் ஒரு குழப்பநிலையை உருவாக்கியமை குறித்து தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க முன்னணி முறைப்பாடு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாட்டிலிருந்து வெளியேறும் முயற்சிகளை எடுத்து வருவதாகவும், பலர் கைதுசெய்யப்பட்டுள்ள தாக ரூபவாஹினி தொலைக்காட்சி சேவைமூலம் மோசமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் முறையிட்டுள்ளார்.

ரூபவாஹினிச் சேவைக்கென தகுதிவாய்ந்த அதிகரியொருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும்' இந்தச் செயற்பாட்டில் அவரால் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டுமென உயர்நீதிமன்றம் அண்மையில் வழங்கியிருக்கும் தீர்ப்பின் காரணமாக, தகுதிவாய்ந்த அதிகாரியினால் எதுவும் செய்ய முடியாத நிலை இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாயளர் மேலும் சுட்டிக் காட்டினார்.

### வன்னியில்...

வெளியிடப்படும் என தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார். வன்னி மாவட்டத்துக்கான வாக்களிப்பு 62 வீதம் எனவும் அவர் தெரிவித்ததுடன், தேர்தல் தொடர்பாக எந்தவிதமான முறைப்பாடும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

### வன்முறை....

அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பாக இன்று குறிப்பிட்ட கட்சிகளின் செயலாளர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே முடிவுகள் வெளியிடப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸாநாயக்க நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். (01)

### பொதுத் தேர்தல்...

10.30 மணிக்கு அணைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து தேர்தல் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்ட பின்னர், எடுக்கப்படும் இறுதித் தீர்மானத்தின் அடிப்படையில் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும்.

இதேவேளை - சில மாவட்டங்களில் விருப்பு வாக்குகள் எண்ணும் பணி இடம்பெற்று வருகின்றது. இவை இன்று காலை வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (01)

### தமிழ் மக்களின்...

உறுப்பினர்களை மென்மேலும் தமிழ்மக்களது விடுதலைப் பாதையில் உயர்த்திப் பிடித்து விடுதலைப் பயணத்தில் முன்னேறவும் இந்த அரசியல் பங்களிப்பு ஊக்குவித்துள்ளது.

இதுவே மக்களது எதிர்பார்ப்புமாகும். இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் முக்கியத்துவத்தையும் இந்தப் பங்களிப்புப் பெறுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாமும் எமது தலைமைத்துவமும் தமிழ்மக்களது ஒரு புதிய உறுதிப்பாட்டுடன் உழைத்து எமது இலட்சிய இலக்கினை எட்டுவோம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

எமது தேசியத்தினையும், எமது தாயத்தின் மீதான பற்றுதலையும் எமக்குள்ள சுயநிர்ணய உரிமையையும் நாம் அனைத்து உலகத்திற்கும் மீளவும் வலுவுடன் பறைசாற்றுவதற்கான சாதகமான வாய்ப்பினையும் தமிழ்மக்கள் உருவாக்கியுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்பாராத வகையில் ஹெல உறுமய முன்னணியில்

(கொழும்பு)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சி யாரும் எதிர்பாராத வகையில் பெருமளவு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் தனது ஆசன எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

தர்மராஜ்யக் கோட்பாட்டை அடிப படையாகக் கொண்டு இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கான நாடு எனப் பிரகடனப்படுத்தி இரண்டு தேசியக்கட்சிகளுக்கு எதிராகக் களம் இறங்கிய அந்தக் கட்சி இதுவரை ஆறு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது என்ற நிலையில், ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேரப் பேச்சுக் கள் நடைபெற்று வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 1989 ஆம் ஆண்டின்...

தமிழர் தரப்பு இரண்டு ஆசனங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, இம்மாவட்டத்தின் மூதூர் தொகுதியில் முகமது அப்துல் றஜிப் என்பவர் வெற்றி பெற்றுள்ளார்.

இதனைவிட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் எ.எச் ஜயந்த குலசேகர என்பவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன் 44 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளையும் துரைரட்ணசிங்கம் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளையும் பெற்றிருப்பதாகவும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவித்தன.

மேலும் இந்தத் தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகள் தொடர்பான உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வருமாறு.

இலங்கை தமிழரசுக் கட்சி 69087

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 31053

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 65190

ஐக்கிய தேசியக் கட்சி 15693

ஈ.பி.டி.பி 540

புல்மோட்டை குச்சவெளிப் பிரதேசத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்களில் சுமார் 1500 முதல் 2000 வரையான முஸ்லிம் மக்களும் தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்ததாகவும் தெரியவருகிறது.

### 10 மாவட்டங்களின்...

456 வாக்குகளைப்பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 3 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 81 ஆயிரத்து 697 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது.

பொலநறுவை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 1 இலட்சத்து 6 ஆயிரத்து 247 வாக்குகளைப்பெற்று 3 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 75 ஆயிரத்து 664 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 7 இலட்சத்து 78 ஆயிரத்து 897 வாக்குகளைப்பெற்று 5 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 98 ஆயிரத்து 877 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 1 இலட்சத்து 8 ஆயிரத்து 259 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 1 இலட்சத்து 642 வாக்குகளைப்பெற்று 2 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 5 இலட்சத்து 9 ஆயிரத்து 963 வாக்குகளைப்பெற்று 5 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 37.1 சதவீத வாக்கைப் பெற்றதால், 6 ஆசனங்களைப்பெற்றது.

தேசிய ஹெல உறுமய 1 இலட்சத்து 2 ஆயிரத்து 314 வாக்குகளைப்பெற்று 2 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 6 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 3 ஆசனங்களையும், தேசிய ஹெல உறுமய ஒரு ஆசனத்தையும் பெற்றது.

மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 60.27 சதவீத வாக்கைப் பெற்று 5 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 3 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 50.88 சதவீத வாக்கைப் பெற்று 5 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி கேகாலை மாவட்டத்தில் 46.66 சதவீத வாக்கைப்பெற்று 3 ஆசனங்களையும் பெற்றது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.